# வளிமண்டலவியல் திணைக்களம்

## 2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த நிருவாக அறிக்கை

### 1. தொலைநோக்கு

வானிலை, காலநிலை மற்றும் முன் எச்சரிக்கை சம்பந்தப்பட்ட சேவைகள் தொடர்பில் அதிசிறந்த நிலையமாக விளங்குதல்.

### 2. செயற்பணி

தேசிய நலன்களுக்கும் சர்வதேச நியமங்களுக்கும் அமைவாக அரச நிறுவனங்களுக்கும் தனியார்துறைக்கும் பொது மக்களுக்கும் வளிமண்டவியல், வானூர்தி வளிமண்டவியல், கடல்சார் வளிமண்டலவியல், நீர் வளிமண்டலவியல், கமத்தொழில் வளிமண்டலவியல், காலநிலையியல் மற்றும் வானியல் ஆகிய விடயங்கள் தொடர்பில் சேவைகளை வழங்குதல்.

### 3. குறிக்கோள்கள்

- உலக வளிமண்டலவியல் அமைப்பின் நியமங்களுக்கு அமைவாக வானிலை அம்சங்களை அவதானித்தலும் சீர்படுத்தலும் காலநிலையியல் தரவுத்தளங்களைப் பேணிவருதலும்.
- தேசிய அதிகாரசபையாக விளங்கி வானிலை மற்றும் காலநிலையியல் சேவைகளை வழங்குதல்.
- வானிலையுடன் தொடர்புடைய இடர்பாடுகள், ஆழிப்பேரலை ஆகியன பற்றிய முன் எச்சரிக்கைகளையும் ஆலோசனைகளையும் வழங்குதல்.
- உலக வளிமண்டலவியல் அமைப்பினாலும் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பினாலும் விதித்துரைக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக தேசிய மற்றும் சர்வதேச விமானசேவைகளுக்கு அவசியமான வளிமண்டலவியல் சேவைகளை வழங்குதல்.
- வளிமண்டலவியலிலும், காலநிலையியலிலும் காலநிலை மாற்றத்திலும் இவைசார்ந்த விடயங்கள் பற்றிய கற்கைகளையும் ஆராய்ச்சிகளையும் ஊக்குவித்தல்.
- மட்டுப்படுத்தப்பட்ட வானியல் காந்தவிசை, நிலவுலகக் கோளக் காந்தவிசை சம்பந்தப்பட்ட சேவைகளை வழங்குதல்.

## 4. பின்னணி

இத்திணைக்களம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் தொழிற்பட்டுக்கொண்டு இருந்ததுடன் அதிகரித்துவரும் வானிலை, காலநிலை அனர்த்தங்கள் மற்றும் தற்போது இச்சேவைகளுக்கு அதிகரித்துவரும் கோரிக்கைகள் பற்றி கவனத்திற்கொண்டு திணைக்களத்தின் நவீனத்துவத்துக்கான முன்மொழிவுகள் பற்றி அமைச்சரவைக்கு விஞ்ஞாபனம் ஒன்றை சமர்ப்பித்துள்ளதுடன் அதற்கான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது. அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ள அக்கருத்திட்டத்தின்படி அவசியமான ஒதுக்கீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

## 5. பதவியணியினர்

வளிமண்டலவியல் திணைக்களம் வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகத்தினால் நிர்வகிக்கப்படுகின்றது. இத்திணைக்களத்திற்கு கொழும்பில் அமைந்துள்ள தலைமையகத்தை தவிர 21 வளிமண்டலவியல் அலுவலகங்கள் நாடுபூராகவும் அமைக்கப்பட்டுள்ளது.

தேசிய வளிமண்டலவியல் நிலையமும் ஆராய்ச்சி, வானிலை, மழைவீழ்ச்சி, கமத்தொழில் வளிமண்டலவியல், ரேடார்/ரேடியோசோன்ட், கணனி மற்றும் வானிலைமாற்றம் பற்றிய தொழில்நுட்ப பிரிவுகளும் கொழும்பிலுள்ள தலைமையகத்தில் அமையப்பெற்றுள்ளன.

இலத்திரனியல் உபகரணங்களைப் பராமரித்து வருகின்ற பிரிவு, இலத்திரனியல் பொறியியல் பிரிவு, உபகரணங்கள் பிரிவு, நிதி மற்றும் நிர்வாகப் பிரிவு என்பனவும் திணைக்களத்தின் தலைமையகத்தில் அமைந்துள்ளது. கட்டுநாயக்கா மற்றும் இரத்மலானை விமான நிலையங்களிலுள்ள வளிமண்டலவியல் அலுவலகங்கள் முறையே, சர்வதேச விமானப் போக்குவரத்துக்கும் உள்நாட்டு விமானப் போக்குவரத்துக்குமான சேவைகளை வழங்குகின்றது.

2012.03.29 மற்றும் 2012.08.14 ஆந் திகதிய கடிதங்கள்மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட புதிய பதவியணியின்படி திணைக்களத்தின் மொத்த பதவியணியினர் சிரேட்ட மட்டத்தில் 52 உத்தியோகத்தர்களையும், மூன்றாம்நிலை மட்டத்தில் 29 உத்தியோகத்தர்களையும், இரண்டாம்நிலை மட்டத்தில் 238 உத்தியோகத்தர்களையும் தொடக்க மட்டத்தில் 140 உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கியுள்ளது. (மொத்த எண்ணிக்கை 459) அவர்களுள் 32 சிரேட்ட மட்ட உத்தியோகத்தர்களையும் 03 மூன்றாம்நிலை மட்ட உத்தியோகத்தர்களையும் 176 இரண்டாம்நிலை மட்ட உத்தியோகத்தர்களையும் 72 தொடக்கநிலை மட்ட உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய 283 பதவியணியினர் 2012 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியளவில் சேவையில் ஈடுபட்டவர்களாக இருந்தனர். புதிய மீள்கட்டமைக்கப்பாக்க யோசனைகளின்படி அனுமதிக்கப்பட்ட பதவி வெற்றிடங்களை நிரப்பும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2012 ஆம் ஆண்டினுள் வளிமண்டலவியல் திணைக்களத்தின் பதவியணியில் இடம்பெற்ற திருத்தங்கள் கீழ் தரப்பட்டுள்ளன:

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் DMS/C04/12-05 இலக்கமும் 2012.03.29 ஆந் திகதியும்கொண்ட புதிய பதவியணியினா் அனுமதிப்படி திணைக்களத்தின் பதவியணியினா் எண்ணிக்கை 357 இலிருந்து 449 ஆக அதிகரித்ததுடன், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் DMS/C04/12-05 இலக்கமும் 2012.08.14 ஆந் திகதியும்கொண்ட கடிதத்தின்மூலம் 10 நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தா் பதவிகள் அனுமதிக்கப்பட்டவுடன் வளிமண்டலவியல் திணைக்களத்தின் மொத்த பதவியணியினா் எண்ணிக்கை 459 வரை அதிகரித்தது. அதன்படி, தற்போதைய அனுமதித்த பதவி வெற்றிடங்களைப் பூா்த்திசெய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வளிமண்டலவியல் பணிப்பாளா் நாயகமாக இருந்த திரு.ஜீ.பீ.சமரசிங்க அவா்கள் 60 வயது நிறைவில் 2012.03.23 ஆந் திகதியிலிருந்து சேவையிலிருந்து ஓய்வுபெற்றதன் காரணமாக ஏற்பட்ட பணிப்பாளா் நாயகம் பதவி வெற்றிடத்திற்கு அமைச்சரவையினால் அப்போதைக்கு சிரேட்ட பணிப்பாளா் எஸ்.எச்.காரியவசம் அவா்கள் 2012.03.24 ஆந் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டாா். பிரதிப் பணிப்பாளா் திரு.டீ.ஜே.ஏ.வீரவா்த்தன அவா்கள் அன்று முதல் பணிப்பாளா் பதவியொன்றுக்கும், சிரேட்ட வளிமண்டவியல் விஞ்ஞானி திரு.ஏ.கே. கருணாநாயக்க அவா்கள் அன்றைய தினம் முதல் பிரதிப் பணிப்பாளா் பதவியொன்றுக்கும் நியமிக்கப்பட்டனா். பதவியணி மீள்கட்டமைப்பாக்க யோசனையின்படி, சிரேட்ட பிரதிப் பணிப்பாளராக இருந்த திரு. எஸ்.ஆா்.ஜயசேக்கர அவா்களும் பிரதிப் பணிப்பாளராக இருந்த திரு. எம்.டீ.தயானந்த அவா்களும் பணிப்பாளா் பதவிகளுக்கு 2012.03.29 ஆந் திகதியிலிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பின்பேரில் நியமிக்கப்பட்டனா்.

திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளா் ஒருவராகச் சேவையாற்றிய திரு.கே.எச்.எம்.எஸ். பிரேமலால் அவா்கள் பிரதிநிதித்துவ அடிப்படையில் 2012.08.24 ஆந் திகதியிலிருந்து சாா்க் வளிமண்டலவியல் ஆராய்ச்சி நிலையத்தில் விஞ்ஞானி பதவிக்கு மூன்றாண்டு காலத்திற்கு விடுவிக்கப்பட்டாா். வளிமண்டலவியல் உத்தியோகத்தா்களான திருமதி வீ.எஸ்.திசாநாயக்க, திரு.பி.ஜீ.ஏ. பிரேமரத்ன ஆகியோா் முறையே 2012.10.26, 2012.12.13 ஆந் திகதிகளிலிருந்து சனாதிபதி பதவியணியில் சேவையாற்றுவதற்காக விடுவிக்கப்பட்டனா்.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளா் நாயகத்துக்கு மேலதிகமாக, 2012 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்றுச்சென்ற உத்தியோகத்தா்கள் விபரம் வருமாறு:

| தொ. இல. | பெயா் | பதவி | ஓய்வுபெற்றுச் சென்ற திகதி |
|---|---|---|---|
| 01 | திரு. ஜே.ஏ.திலகரத்ன | வளிமண்டலவியல் விஞ்ஞானி | 2012.12.28 |
| 02 | திரு. கே.கே.பியதிஸ்ஸ | வளிமண்டலவியல் விஞ்ஞானி | 2012.03.27 |

| | | | |
|---|---|---|---|
| 03 | திரு.கே.பி.டீ.ஆர்.ஏ. கருணாநாயக்க | சிரேட்ட வளிமண்டலவியல் உத்தியோகத்தர் | 2012.02.05 |
| 04 | திரு. சி.ஹெட்டிஆரச்சி | சிரேட்ட வளிமண்டலவியல் உத்தியோகத்தர் | 2012.10.24 |
| 05 | திரு. எம்.கே.பி.பீ.ஜே.டீ. பெரேரா | சிரேட்ட தொடர்பாடல் உத்தியோகத்தர் | 2012.03.16 |
| 06 | திரு. வீ.புஷ்பநாதன் | வளிமண்டலவியல் அவதானிப்பாளர் | 2012.01.26 |
| 07 | திரு. ஈ.ஜீ.உபாலி | வளிமண்டலவியல் அவதானிப்பாளர் | 2012.04.09 |
| 08 | திரு. எச்.ஜீ.சி.கே.காரியவசம் | வளிமண்டலவியல் அவதானிப்பாளர் | 2012.04.01 |
| 09 | திரு. ஜே.ஸ்ரீவன் | முகாமைத்துவ உதவியாளர் | 2012.08.12 |
| 10 | திரு. டி.ஏ.ர்.ரணவக்க | வளிமண்டலவியல் உதவியாளர் | 2012.06.13 |

மேலும், 2012 ஆம் ஆண்டில் புதிய நியமனம்பெற்ற, இடமாற்றம்பெற்ற, சேவையை விட்டு விலகிச்சென்ற, வேறு இடமொன்றுக்கு மாற்றல்பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்கள் பற்றிய விபரம் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது:

**புதிய நியமனம்பெற்ற உத்தியோகத்தர்கள்:**

| பெயர் | ஏற்புடைய சேவை | பதவி | நியமனத்தை ஏற்ற திகதி |
|---|---|---|---|
| செல்வி யூ.பி.ஏ.ரி.திலுமி கருணாநாயக்க | இலங்கை நிருவாக சேவை | உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) | 2012.01.02 |
| திரு. ஏ.சீ.எம். ரொட்ரிகோ | இலங்கை விஞ்ஞான சேவை | வளிமண்டலவிய லாளர் | 2012.01.16 |
| செல்வி ஏ.எச்.பி.பி. கருணாபால | இலங்கை விஞ்ஞான சேவை | வளிமண்டலவிய லாளர் | 2012.02.03 |

**இடமாற்றம்பெற்று வந்த உத்தியோகத்தர்கள்:**

| பெயர் | ஏற்புடைய சேவை | பதவி | சேவைக்கு சமுகமளித்த திகதி |
|---|---|---|---|
| திருமதி டபிள்யு.ஜீ.கே. அருணசாந்தி | இலங்கை கணக்காளர் சேவை | கணக்காளர் | 2012.09.10 |

**சேவையிலிருந்து விலகிய உத்தியோகத்தர்கள்:**

| பெயர் | ஏற்புடைய சேவை | பதவி | சேவையிலிருந்து விலகிய திகதி |
|---|---|---|---|
| திரு.கே.ஜீ.பி.டீ.வை. குலசேக்கர | இலங்கை தொழில்நுட்ப சேவை | வளிமண்டலவியல் அவதானிப்பாளர் (பயிற்சி) | 2012.03.13 |
| திரு. ஆர்.டபிள்யு.டீ.டபிள்யு. ராஜசேகர | இலங்கை தொழில்நுட்ப சேவை | வளிமண்டலவியல் அவதானிப்பாளர் (பயிற்சி) | 2012.03.13 |

| | | | |
|---|---|---|---|
| செல்வி கே.எல்.ஜீ.டபிள்யு. குணதிலக | இலங்கை தொழில்நுட்ப சேவை | தொலைத்தொடர்பு மற்றும் ரேடார் தொழில்நுட்பவலர் | 2012.03.26 |
| செல்வி எஸ்.எம்.டீ.டீ. சேனாரத்ன | இலங்கை தொழில்நுட்ப சேவை | தொலைத்தொடர்பு மற்றும் ரேடார் தொழில்நுட்பவலர் | 2012.03.26 |
| திரு. டீ.யூ.ஏ.பர்னாந்து | இலங்கை தொழில்நுட்ப சேவை | தொலைத்தொடர்பு மற்றும் ரேடார் தொழில்நுட்பவலர் | 2012.03.26 |
| செல்வி எச்.எம்.ஈ.எல். ஹுலுவன | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை | முகாமைத்துவ உதவியாளர் | 2012.03.19 |

**இடமாற்றம்பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்கள்:**

| பெயர் | ஏற்புடைய சேவை | பதவி | இடமாற்றம் பெற்ற திகதி |
|---|---|---|---|
| திருமதி. டீ.யூ.ஏ. எதிரிசிங்க | இலங்கை கணக்காளர் சேவை | கணக்காளர் | 2012.09.11 |
| திரு.டபிள்யு.எச்.கே.எம். த சில்வா | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை | முகாமைத்துவ உதவியாளர் | 2012.09.17 |
| திரு.டபிள்யு.கே.எச்.சந்தருவன் | இலங்கை தொழில்நுட்ப சேவை | தொலைத்தொடர்பு மற்றும் ரேடார் தொழில்நுட்பவலர் | 2012.05.03 |
| செல்வி பி.அபேநாயக்க | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை | முகாமைத்துவ உதவியாளர் | 2012.05.10 |

2012.09.27 ஆந் திகதியிலிருந்து சேவைக்குச் சமுகமளிக்காத காரணத்தால் முகாமைத்துவ உதவியாளர் ஒருவராகச் சேவையாற்றிய திரு. யூ.எல்.பீ.சாமானுக்கு 2012.09.27 ஆந் திகதியிலிருந்து சேவையிலிருந்து விலகும் அறிவித்தலை விடுக்க பணிப்பாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அலுவலகப் பணியாளர் திரு.டபிள்யு.பி.விக்கிரமாரச்சி 2012.05.11 ஆந் திகதி திடீரென மரணமடைந்தார்.

2012 வருடாந்த இடமாற்ற நடவடிக்கைமுறையின்படி முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு I உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றம்பெற்று திணைக்களத்திலிருந்து சென்றதுடன், அதற்குப் பதிதாக முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III உத்தியோகத்தர் சேவைக்குச் சமுகமளித்தார்.

2012 வருடாந்த இடமாற்றத்தின்படி இணைந்த சாரதி சேவையின் உத்தியோகத்தர் ஒருவரும் அலுவலகப் பணியாளர் சேவையின் ஊழியர்கள் இருவரும் திணைக்களத்திலிருந்து வெளிச்சென்றதுடன், அதற்குப் பதிலாக மூன்று உத்தியோகத்தர்கள் சேவைக்குச் சமுகமளித்தனர்.

திணைக்களத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் துப்புரவேற்பாட்டு நடவடிக்கைகளையும் வெளியாருக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டதன் காரணமாகவும் இங்கு சேவையாற்றிய அலுவலகப் பணியாளர் சேவையின் இரு ஊழியர்கள் பதிலாள் இன்றி விடுவிக்கப்பட்டனர்.

இதன்படி, வருட இறுதியில் 459 ஆகவிருந்த அனுமதிக்கப்பட்ட பதவியணியினரில் 283 ஊழியர்கள் பணியாற்றினர்.

## 6. திணைக்களத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள்

தெனியாய கொங்கல மலை உச்சியில் பொருத்தப்படவுள்ள டொப்லர் ரேடார் இயந்திரத்திற்கான கோபுரங்களும், கட்டிடங்களும் நிர்மாணித்து பூர்த்திசெய்யப்பட்டது. கோபுரத்திற்கு உபகரணங்களைத் தூக்குவதற்கான பாரந்தூக்கியை எடுத்துச்செல்லும்போது எதிர்பாராத விதமாக குடைசாய்ந்தமையால் வீதியின் ஒரு பகுதி உடைந்ததுடன், உபகரணங்களைப் பொருத்தும் பணி தாமதமடைந்தது. வீதியைத் திருத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2013 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் உபகரணங்களைப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் புதிய அலுவலகக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளை இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தது. முதற்கட்டம் அதாவது அலுவலங்களுக்கு நெகோர்ட் (NECORD) உதவி கிடைத்ததுடன், ஆண்டு இறுதியாகும்போது அலுவலகக் கட்டிட நிர்மாண வேலைகள் பூர்த்தியடையும். இதன் இரண்டாம் கட்ட வேலைகளுக்கான (அணுகுவழி நிர்மாணம், உபகரண சதுக்கத்தை அமைத்தல், பாதுகாப்பு வேலி அமைத்தல்) நிதி ஒதுக்கீடு இன்றிய காரணத்தால் அதனை ஆரம்பிக்க முடியாமல் சென்றது. இங்கு புதிய உத்தியோகபூர்வ குடிமனைக் கட்டிட நிர்மாணம் திணைக்கள நிதியின்மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், சுமார் 90% நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. 2013 ஆரம்பத்தில் புதிய அலுவலகக் கட்டிடத்திலிருந்து அலுவலகத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை புதிய அலுவலகத்திற்கு காணித்துண்டொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளது. முதலாவதாக அந்த உத்தியோகபூர்வ குடிமனை நிர்மாணப் பணி திணைக்கள நிதியை ஈடுபடுத்தி ஆரம்பிக்கப்பட்டது. இதனிடையே காணி உரித்து குறித்த கண்டனங்கள் எழுந்ததன் காரணமாக அப்பிணக்கு நிவர்த்திசெய்யப்படும்வரை நிர்மாணப் பணிகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. நிருணயச் செயன்முறை குறித்த பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வவுனியா, நுவரெலியா பிராந்திய அலுவலகங்களின் பழுதுபார்ப்பு வேலைகள் இடம்பெற்றன. மன்னார் அலுவலகத்தின் திருத்த வேலைகளும் நுவரெலியா சுற்றுலா பங்களா பொறுப்பாளருக்கு உத்தியோகபூர்வ குடிமனையொன்றை நிர்மாணிக்கும் பணியும் ஆரம்பிக்கப்பட்டதுடன், அப்பணிகள் இடம்பெற்று வருகின்றன.

கொய்கா (KOICA) உதவி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் கொரிய தொடர்பாடல், சமுத்திர, வளிமண்டலவியல் அலுவல்களுக்கான செய்மதி ஊடாக தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் கருத்திட்டத்திற்கு உரிய பயிற்றுவிப்புகள் பூர்த்தியடைந்துள்ளதுடன், அச்செய்மதி நிழல் வரையுரு மற்றும் தரவு எதிர்வுகூறும் பணிக்காக கையாளப்படும்.

மக்கட்சீன உதவியின் கீழ் சீன வளிமண்டலவியல் நிருவாக நிறுவனத்தினால் (CMA) செய்மதித் தகவல் பெறல் முறைமைகளும் நிறுவப்பட்டுள்ளன.

## 7. epykl;l mtjhdpg;Gf;fs;

அநுராதபுரம், மட்டக்களப்பு, கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை, கட்டுகஸ்தோட்டை, கட்டுநாயக்க, நுவரெலியா, புத்தளம், இரத்மலானை, இரத்தினபுரி, பொலனறுவை, திருகோணமலை ஆகிய இடங்களில் அமைந்துள்ள வளிமண்டலவியல் அவதானிப்பு நிலையங்களில் 24 மணித்தியால வானிலை அவதானிப்பு பேணப்பட்டது. திருகோணமலை கடற்படைத் தளத்திலுள்ள வளிமண்டலவியல் நிலையத்தின் அவதானிப்பு வேலைகள் இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

பதுளை, பண்டாரவளை, குருநாகல், மகாஇலுப்பள்ளம, மன்னார், மொணராகல, பொலனறுவை, பொத்துவில், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் 0530 மணியிலிருந்து 2030 மணிவரை நாளொன்றுக்கு 16 மணித்தியாலங்கள் அவதானிப்பு பேணப்பட்டது. உலக வளிமண்டலவியல் அமைப்பினால் (WMO) விதந்துரைக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப வழிகாட்டுநெறிகளின்படியும் நிபந்தனைகளின்படியும் கிறீனிச் நியம நேரத்தில் 0000, 0300, 0600, 0900, 1200, 1500, 1800, 2100 ஆகிய நேரங்களில் வளிமண்டலவியல் நிலையங்களிலிருந்து அவதானிக்கப்படும் மழைவீழ்ச்சி, அமுக்கம், வெப்பநிலை, வளி ஈரப்பதன், காற்றின் வேகம்/திசை, தெரிநிலை, முகில்களின் வகை/அளவு ஆகிய அளவுகோள்கள் அதேநேரத்தில் கொழும்பில் அமைந்துள்ள தேசிய வளிமண்டலவியல் நிலையத்திற்கு (NMC) அனுப்பிவைக்கப்பட்டது. இவ்வாறாக ஆண்டினுள் பெற்றுக்கொள்ளப்பட்ட epykl;l அவதானிப்புகளின் தொகை 56,925 ஆகும்.

## 8. உயர் வளிமண்டல அவதானிப்புரைகள்

தாழ் வளிமண்டலத்தின் வெவ்வேறு உயரங்களில் காற்றின் வேகத்தையும் திசையையும் கணிப்பிடுவதற்கான ரேடார் பலூன் அவதானிப்பு கொழும்பில் மேற்கொள்ளப்பட்டது. 100 கிராம் பலூன்களைப் பயன்படுத்தி 0600 மணிக்கு கிறீனிச் நியம நேரத்திலும் 350 கிராம் பலூன்களைப் பயன்படுத்தி 1200 மணி கிறீனிச் நியம நேரத்திலும் இத்தகைய அவதானிப்புக்கள் செய்யப்பட்டன.

உயர் வளிமண்டலத்தில் வெவ்வேறு உயரங்களில் அமுக்கம், வெப்பநிலை மற்றும் ஒப்பீட்டு அடிப்படையிலான ஈரப்பதன் ஆகியவற்றைக் கணப்பிடுவதற்காக கிறீனிச் நியம நேரப்படி 0600 மணிக்கு ரேடியோ சொன்ட் அவதானிப்பு உபகரணம் கொழும்பு அலுவலகத்தில் வாரத்திற்கு மூன்று தடவைகள் பயன்படுத்தப்பட்டது. இது தொடர்பில் உலக வளிமண்டலவியல் கட்டளைகள் (WMO) சுயேட்சை ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், யப்பானிய அரசாங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட GPS கொண்ட ரேடியோ சொண்டி உபகரணம் பயன்படுத்தப்பட்டது. உபகரணத்தில்

வழுக்கள் ஏற்பட்டதன் காரணமாக பல மாத காலமாக அவதானிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை. அந்த அடிப்படையில், ஆண்டினுள் 82 ரேடியோ சொண்டி அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. அம்பாந்தோட்டை, புத்தளம், பொலனறுவை ஆகிய நிலையங்களில் கிறீனிச் நியம நேரத்தில் 0000, 0600, 1200 ஆகிய மணித்தியாலங்களில் முன்னோடி பலூன் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு உயர் வளிமண்டலத்தில் காற்றின் வேகமும் திசையும் கணிப்பிடப்பட்டது. இதற்கு மேலதிகமாக, கிறீன்விச் நியம நேரத்தில் 0000 மணித்தியாலத்திலும் தொழில்நுட்ப அல்லது வேறு ஏதேனும் காரணத்தைக்கொண்டு ரேடார் காற்று அவதானிப்பு இரத்துச்செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில், மேலதிகமாக முன்னோடி பலூன் அவதானிப்புக்கள் கொழும்பில் மேற்கொள்ளப்பட்டன. இதன் அடிப்படையில் 2012 ஆம் ஆண்டினுள் கொழும்பு, அம்பாந்தோட்டை, பொலனறுவை, மன்னார் ஆகிய நிலையங்களில் முறையே 921, 1038, 950, 1019 பலூன் (காற்று) அவதானிப்புகள் வீதம் மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், சீரற்ற காலநிலை மற்றும் பலூன்கள் சுற்றயல் தடைகளினால் சூழப்பட்டிருந்தமை முதலியன காரணமாக சில அவதானிப்புகள் வெற்றியளிக்கவில்லை.

## 9. தேசிய வளிமண்டலவியல் நிலையம் (NMC)

பொது மக்களுக்கும் கடற்றொழில் மற்றும் கப்பற் சேவைக்கும் உள்நாட்டு விமானப் போக்குவரத்துக்கும் வானிலை எதிர்கூறல்களையும் சீரற்ற வானிலை நிலைமைகள் குறித்த எச்சரிக்கை அறிவித்தல்களையும் தேசிய வளிடண்டலவியல் நிலையம் தொடர்ந்தேர்ச்சியாக வழங்கிக் கொண்டிருந்தது. அமைச்சினால் வழிநடாத்தப்படும் மீனவ சமுதாயத்தினருக்கான வானொலிக்கு நிகழ்ச்சியில் நாளாந்தம் விசேட வானிலை எதிர்வுகூறல்கள் ஆண்டு முழுவதிலும் மேற்கொள்ளப்பட்டது. ஆண்டு முழுவதிலும் ஊடகங்கள் வாயிலாக சுமார் 9675 தொலைபேசி விசாரணைகளின்போது வானிலை பற்றிய 1551 எதிர்வுகூறல்களும் சீரற்ற காலநிலை பற்றிய 27 அறிவித்தல்களும் ஆழிப்பேரலைகள் பற்றிய 03 அறிவித்தல்களும் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் இலங்கை விமானப்படையினதும் ஏனைய உள்நாட்டு விமானப் பயண இயக்குநர்களுக்கும் இலங்கை விமானப்படையின் பரசூட் பயிற்சிகளுக்கும் அவசியமான 5730 எதிர்வுகூறல்கள் 2012.01.01 – 2012.07.09 வரை வெளியிடப்பட்டன. (2012.07.10 ஆந் திகதி முதல் இதற்கான வானிலை எதிர்வுகூறல்கள் கட்டுநாயக்கா வளிமண்டலவியல் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டது). ஆண்டில் கடற்றொழில் நடவடிக்கைகளுக்கான 732 வானிலை எதிர்வுகூறல்கள் வெளியிடப்பட்டுள்ளதுடன், அக்காலகட்டத்தில் கப்பற் பயணங்களுக்கு வெளியிடப்பட்ட எதிர்வுகூறல்களின் எண்ணிக்கை 1456 ஆகும். வணிக நிறுவனங்களின் பல்வேறு தேவைப்பாடுகளின் நிமித்தம் கோரப்பட்ட 1892 வானிலை அறிக்கைகள் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக, காப்புறுதி உரிமைக் கோரிக்கைகளுடன் தொடர்புடைய 102 வானிலை பற்றிய அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

பசுபிக் ஆழிப்பேரலை எச்சரிக்கைவிடுப்பு நிலையம் (PTWC), ஜப்பான் வளிமண்டலவியல் சங்கம் (JMA), ஆழிப்பேரலைகள் பற்றிய தகவல்களைத் தரும் பிராந்திய ஆழிப்பேரலை எச்சரிக்கைவிடுப்பு நிலையம் (RTSP) ஆகியன மூலம் வெளியிடப்படும் ஆழிப்பேரலை பற்றிய தகவல்களை பெற்று பொதுமக்களுக்கு ஆழிப்பேரலை பற்றிய எச்சரிக்கைகளை

விடுக்கும் பொறுப்புவாய்ந்த நிறுவனமாகவும் தேசிய வளிமண்டலவியல் நிலையம் செயல்படுகிறது.

வளிமண்டலவியல் அலுவலகத்தினால் 2012.07.10 ஆந் திகதி முதல் இலங்கை வான்படை மற்றும் ஏனைய உள்நாட்டு விமானப் பயண இயக்குநர்களுக்கும் இலங்கை வான்படையின் பரசூட் பயிற்சிகளுக்கும் அவசியமான 5080 எதிர்வுகூறல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

## 10. வளிமண்டலவியல் தொலைத்தொடர்பு நிலையம்

தேசிய வளிமண்டலவியல் தொலைத்தொடர்பு நிலையத்திற்கு அவசியமான சகல தேசிய மற்றும் பிராந்திய வளிமண்டலவியல் தரவுகள் இப்பிரிவின் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகிறது. ஏனைய தேசிய, பிராந்திய மற்றும் உலக வளிமண்டலவியல் நிலையங்களுக்கு ஊடுகடத்தும்பொருட்டு இந்நாட்டிற்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட நிலையங்களிலிருந்து வளிமண்டலவியல் தரவுகள் புதுடில்லி பிராந்திய தொலைத்தொடர்பு நிலையத்திற்கு ஊடுகடத்தப்படுகிறது.

கொழும்பு - புதுடில்லி 256 வினாடி ஒன்றிற்கான (GTS) கம்பிவழியூடாக வழிமண்டலவியல் தரவுகளும் ஆழிப்பேரலை சம்பந்தப்பட்ட எச்சரிக்கையும் ஆலோசனைகளும் தாமதமின்றிப் பெற்றுக்கொள்ளப்பட்டன. இணையத்தின் ஊாடக பெறப்பட்ட முகிழ்களின் செய்மதி நிழலுருக்களும் இலக்கமுறை வடிவிலான வெளியீடுகளும் (Numerical Model Outputs) இப்பிரிவின்மூலம் வழங்கப்பட்டன.

## 11. கட்டுநாயக்க விமானநிலைய வளிமண்டலவியல் அலுவலகம்

பயனுறுதிவாய்ந்ததும் பாதுகாப்பானதுமான விமானப் பயணங்களுக்கு வளிமண்டலவியல் தகவல்களையும் எதிர்வுகூறுகைகளையும் வழங்குவது இன்றியமையாத ஒரு விடயமாகும். ஒவ்வொரு சர்வதேச விமானப் பயணத்தின்போதும் விமானம் பறப்பதற்கு குறைந்தபட்சம் மூன்று மணித்தியாலங்களுக்கு முன்பே குறித்த நேரங்களில் விமான ஓடுபாதையின் காற்று, வெப்பநிலை, அமுக்கம் போன்ற எதிர்வுகூறுகைகளும், குறித்த பயண முடிவிடம் வரையான உயர் வளிமண்டலத்தின் வானிலை நிலைமை பற்றிய (காற்று, வெப்பநிலை, முகிழ்கள், வாய்ப்புள்ள இடர்பாடுகள் முதலியன) எதிர்வுகூறுகைகளும், பயணப் பாதையிலுள்ள சகல விமானநிலையங்களின் வானிலை பற்றிய தகவல்களுடன்கூடிய அறிக்கையொன்றும் விமானமோட்டிக்கு வழங்கப்படல் வேண்டும்.

இந்த அடிப்படையில், கொழும்பு வான் தகவல்கள் பிராந்தியம் (Colombo FIR) ஊடாக பயணிக்கும் மற்றும் கட்டுநாயக்கா விமானநிலையத்தினால் உபயோகிக்கப்படும் சர்வதேச விமானங்களுக்கான சகல வளிமண்டலவியல் தரவுகளை வழங்குதல், கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் அமைந்துள்ள வளிமண்டலவியல் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு வழங்கப்பட்ட சேவை GTS மற்றும் SADIS-2G தொடர்பாடல் முறைமையூடாக செயல்திறனுடன் நிறைவேற்றப்பட்டது. சேவை பெற்றுக்கொண்ட ஆகாய விமானங்களின் அளவு 2012 ஆம் ஆண்டிலும் கணிசமான அளவு அதிகரித்திருந்தது.

ஐரோப்பிய மற்றும் மத்திய கிழக்கு பயண முடிவிடம் வரை இடைவிடாப் பறத்தல்களையும் உள்ளடக்கிய சர்வதேச விமானப் பயணங்களுக்கான பல்வேறு பறத்தல் மட்டங்களில் நிலவும் காற்று, வெப்பநிலையைக் காட்டும் வரைபடங்கள், ஆகாய மார்க்கங்களுக்கு இடையிலான விசேட காலநிலை மற்றும் ஏனைய வளிமண்டலவியல் தகவல்கள் அடங்கலான 24,517 கோப்புகள் இவ்வாண்டில் வெளியிடப்பட்டன. இதற்கு மேலதிகமாக, 1474 விமானநிலைய முடிவிட எதிர்வுகூறல்கள் (TAF) ½ மணித்தியாலத்திற்கு ஒருமுறை பெறப்படும் 17,306 காலநிலை அறிக்கைகளும் (METAR), 411 விசேட காலநிலை அறிக்கைகளும் (SPECI), குறிப்பிடத்தக்க காலநிலை நிலைமைகள் பற்றிய 136 அறிக்கைகளும் (SIGMET), 40 விமானநிலைய விபத்து எச்சரிக்கைகளும் (Aerodrome Warnings) இந்த அலுவலகத்தினால் வெளியிடப்பட்டன.

இதற்கு மேலதிகமாக, 2012.07.10 ஆந் திகதி முதல் இலங்கை வான் படைக்கும் ஏனைய உள்நாட்டு விமானப் பயண இயக்குநர்களுக்கும், இலங்கை வான்படையின் பரசூட் பயிற்சிகளுக்கும் அவசியமான எதிர்வுகூறல்களை வெளியிடுவதற்கு கட்டுநாயக்கா விமானநிலைய அலுவலகம் நடவடிக்கை எடுத்தது. ஆண்டில் இவ்வாறான 5080 எதிர்வுகூறல்கள் வெளியிடப்பட்டுள்ளன. (இதற்கு முன்னர் இந்த எதிர்வுகூறல்கள் கொழும்பு தேசிய வளிமண்டலவியல் நிலையத்தினால் வெளியிடப்பட்டது) திணைக்களத்தின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காணப்பட்டபோதும், இக்கடமைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டன.

## 12. இரத்மலானை விமானநிலைய வளிமண்டலவியல் அலுவலகம்

இரத்மலானை விமானநிலையத்தின் ஊடாக தொழிற்படுத்தப்படும் உள்நாட்டு விமானப்பயண நடவடிக்கைகளுக்கு அவசியமான காலநிலை பற்றிய தகவல்களை வழங்குவதும், நாளாந்தம் தேவைப்படும் வானிலை அவதானிப்பைச் செய்வதுமே இந்த அலுவலகத்தின் முக்கிய பணியாக இருந்தது. அந்தந்த உள்நாட்டு விமானப் பயண சேவைகளுக்கும் களங்களுக்கும் வளிக்கோலத்தின் பல்வேறு மட்டங்களில் காற்றின் வேகம், வெப்பநிலை, வானிலை, முகிழ்கள் பற்றிய எதிர்வுகூறல்கள் அடங்கிய எதிர்வுகூறல்கள் கொழும்பு தேசிய வளிமண்டலவியல் நிலையத்தினால் வெளியிடப்படுகிறது. விமான வழிப்பாதையினதும், விமானப் பயணங்கள் சார்ந்த பிரதேசங்களினதும் வானிலை எதிர்வுகூறல்களை கொழும்பிலுள்ள தேசிய வளிமண்டலவியல் மத்திய நிலையத்திலிருந்து பெற்றுக்கொண்டு, இலங்கை வான்படைக்கும் (SLAF) ஏனைய உள்நாட்டுப் பறத்தல் நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டன. 2012 ஆம் ஆண்டில் அத்தகைய 10,805 காலநிலை எதிர்வுகூறல்கள் வெளியிடப்பட்டன. இதற்கு மேலதிகமாக, மணித்தியாலத்துக்கு மணித்தியாலம் பெறப்படும் 4,989 காலநிலை அறிக்கைகளும் (METAR), 271 விசேட காலநிலை அறிக்கைகளும் (SPECI) விமானப் போக்குவரத்து நோக்கங்களுக்காக வழங்கப்பட்டன.

## 13. காலநிலை மாற்ற ஆய்வுகளுக்கான நிலையம் (CCCS)

காலநிலை மாற்ற ஆய்வுகள் பற்றி தேசிய கல்வி நிறுவனத்தின் விரிவுரையாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும், வன உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்களுக்கும் அவசியமான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான வளவாளர்கள் வழங்கப்பட்டனர்.

ஆராய்ச்சி பிரிவுடன் இணைந்து காலநிலை மாற்ற ஆய்வுகள் நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகள் 20ஆம் விடயத்தின் கீழ் தரப்பட்டுள்ளன.

## 14. கம வளிமண்டலவியல் நிலையங்கள்

கம வளிமண்டலவியல் நிலையங்கள் மூலம் நிருவகிக்கப்படும் வேறு நிறுவனங்களை நிறுவியுள்ள 44 கம வளிமண்டலவியல் நிலையங்களில் 37 மாத்திரம் தொழிற்பாட்டில் இருந்தன. குறித்த 37 நிலையங்களின் தரவுகளைச் சேகரித்தல், அத்தரவுகளைப் பரீட்சித்தல், கணனிமயப்படுத்தல் என்பனவும் இடம்பெற்றன. இங்கு ஆகக்குறைந்த மற்றும் ஆகக்கூடிய வெப்பநிலை, புல் ஆகக்குறைந்த வெப்பநிலை, ஆவியாக்கல், சூரியஒளி மணித்தியாலங்களின் எண்ணிக்கை, காற்றின் வேகம்/திசை, புவி மேற்பரப்பிலிருந்து 05, 10, 20, 30 ஆகிய சென்றி மீற்றர் ஆழங்களில் மண்ணின் வெப்பநிலை ஆகிய அளவுகோல்கள் கணிப்பிடப்படுகின்றன. உணவு மற்றும் விவசாய தாபனம் (FAO) வாரந்தோறும் மழைவீழ்ச்சி மற்றும் பெரும்போக-சிறுபோக மழைவீழ்ச்சிகளின் கூட்டுத்தொகைகள், சராசரி மழைவீழ்ச்சி, கிடைக்கப்பெற்ற மழைவீழ்ச்சிகளுக்கு இடையிலான வித்தியாசம் ஆகியவற்றை மேலும் பகுப்பாய்வு செய்வதற்காக வழங்கப்பட்டுள்ளன.

வழங்கப்பட்ட தரவுகளின் தரத்தைப் பண்புரீதியாக முன்னேற்றுவதற்கு குறித்த நிறுவனத் தலைவர்கள் கொழும்பு தலைமையகத்தில் கலந்துரையாடலொன்றை ஒழுங்குசெய்தனர். உடைந்த உபகரணங்களுக்குப் பதிலாக புதிய உபகரணங்களைக் கொள்வனவு செய்யும்போது திணைக்களத்தின் ஒருங்கிணைப்பின்மூலம் மேற்கொள்வதற்கும், அவதானிப்புத் தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிச் செயலமர்வுகளை ஒழுங்குசெய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, குறித்த உத்தியோகத்தர்களுக்கு 2012 யூன் 4, 5 ஆகிய திகதிகளில் கண்ணொருவையிலும் 2012 ஒற்றோபர் 10 ஆந் திகதி லுணுவிலவிலும் 2 பயிற்சிச் செயலமர்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டன. கமத்தொழில் திணைக்களத்தினாலும் தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தினாலும் இச்செயலமர்வுகளுக்கு அவசியமான அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டன.

நிலச்சரிவு ஏற்பட்டு 8 வருடங்களாக மூடப்பட்டிருந்த தெனியாய கம நிலையத்தை மீளத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், 2013 சனவரி மாதம் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் ஆய்வுகள் மூலம் ஆரம்பிக்கத் தயார்செய்துள்ள மித்தெனிய நிலையத்திற்கு அவசியமான உபகரண பகுதிகள் திணைக்களத்தின் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டன.

## 15. மழைமானி நிலையங்கள்

நாடு முழுவதிலும் பரந்துள்ள மழைமாணி வலையமைப்பானது 450 நிலையங்களுக்கு மேற்பட்டதாக இருப்பதுடன், 342 நிலையங்களிலிருந்து மழைவீழ்ச்சித் தரவுகள் கிரமமாக பெற்றுக்கொள்ளப்பட்டன. இந்நிலையங்கள் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களதும், தொண்டு அடிப்படையிலான அவதானிப்பாளர்களதும் ஒத்துழைப்புடன் பேணி வைத்திருக்கப்பட்டன. நாள்தோறும் இந்நிலையங்களில் 0830 மணிக்கு மழைவீழ்ச்சி அளக்கப்பட்டு மாத முடிவில் சீர்முறைப்படுத்தலுக்காக இவ் அறிக்கைகள் எமது திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்ளகூடியவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுள் சுமார் 190 தரவு காலநிலை எதிர்வுகூறல்களை முன்வைக்கும்போது பயன்படுத்துவதற்கு நாளாந்தம் தொலைபேசி வாயிலாக பெற்றுக்கொள்ளப்படுகிறது. ஆண்டினுள் புதிதாக 39 மழைமாணி நிலையங்கள் நிறுவப்பட்டதுடன், 77 நிலையங்களில் பரீட்சிக்கப்பட்டு குறைபாடுகள் சீர்செய்யப்பட்டன.

## 16. கணனிப் பிரிவு

Clicom மற்றும் Climsoft முறைமைகள் 2012 ஆம் ஆண்டிலும் மிகவும் திருப்திகரமாக செயற்பட்டுள்ளன. Clicom மற்றும் Climsoft முறைமைகள் ஊடாக தரவுகள் வெளியிடப்பட்டதுடன், தரவுகளைக் கணனிமயப்படுத்தல் Climsoft முறைமை ஊடாக மேற்கொள்ளப்பட்டது. வானிலை அவதானிப்பு நிலையங்களில் நாளாந்த மழைவீழ்ச்சிகள், வெப்பநிலைத் தரவுகள், ஒப்பீட்டு வளி ஈரப்பதன் பெறுமானங்கள், மழைவீழ்ச்சிகள் ஆகியவற்றின் நாளாந்தத் தரவுகளை கணனிமயப்படுத்தல் சிறந்த முறையில் பேணப்பட்டன. தரவுகளைக் கோரும் நிறுவுனங்களுக்கும் ஆட்களுக்கும் மென் பிரதிகளை (soft copies) அல்லது அச்சீட்டுப் பிரதிகளை (hard copies) வழங்குவதும் இதன்மூலம் முன்னெடுக்கப்பட்டது.

## 17. காலநிலைத் தரவுகளை வழங்குதல்

பல்லாண்டு காலமாக படிமுறையாக சேகரிக்கப்பட்ட காலநிலைத் தரவுகள், பல்வேறு துறைகளிலிருந்து வேண்டப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்களின், சாத்தியவள ஆய்வுகளுக்கும் பெரும் எண்ணிக்கையான திட்டமிடல்களுக்கும் தொடர்ந்தும் வழங்கப்பட்டது. மேலும், காலநிலைத் தரவுகள் ஆராய்ச்சியாளர்களின் ஆய்வுகளுக்கும் பல்கலைக்கழக/பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கும் மத்திய வங்கிக்கும், குடிசன மதிப்பீட்டு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்துக்கும், அனர்த்த முகாமைத்துவ நிலையங்களுக்கும், வளக் கூறுகளை இற்றைப்படுத்துமுகமாக பிரதேச செயலாளர்களுக்கும் சில மாவட்டச் செயலாளர்களின் அபிவிருத்தித் திட்டமிடல்களுக்கும் வெளியீடுகளுக்கும் அவசியமான காலனிலைத் தரவுகள் சகாய விலையில் அல்லது இலவசமாக வழங்கப்பட்டன.

## 18. வானியல் தரவுகளை வழங்குதல்

சூரிய உதயம், சூரிய அஸ்தமனம், சந்திர உதயம், சந்திர அஸ்தமனம் ஆகியவற்றின் நேரங்கள், விளக்கேற்றும் நேரங்கள், கிரகங்களின் காட்சித்தோற்றம், இளம் பிறையின் காட்சித்தோற்றம், சந்திரனின் ஒளிக்கலைகள் மற்றும் கிரகங்களின் நிலை ஆகியன கணிக்கப்பட்டு அரசாங்க அச்சீட்டுக் கூட்டுத்தாபனத்துக்கும் ஏனைய அவசியமான பிரிவுகளுக்கும் வழங்கப்பட்டன. இத்திணைக்களத்தின் சிரேட்ட உத்தியோகத்தர் ஒருவர் நோன்மதி (போயா) மற்றும் அரசாங்க விடுமுறைகள் பற்றிய குழுவின் உறுப்பினர் ஒருவராக தொடர்ந்தும் சேவையாற்றியுள்ளார்.

## 19. நிலநடுக்கம் மற்றும் ஆழிப்பேரலை பற்றிய தகவல்கள்

இலங்கையை அண்மித்த பிரதேசங்களில் ஆழிப்பேரலை பற்றிய தகவல்களைப் போன்றே நிலநடுக்கம் பற்றிய தகவல்கள் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டதுடன் கலியோர்னியா இணைந்த நிலநடுக்க வலையமைப்பு (CISN), பசுபிக் ஆழிப்பேரலை எச்சரிக்கை மத்தியநிலையம் (PTWC), யப்பான் வளிமண்டலவியல் முகவரகம் (JMA), ஆழிப்பேரலை பற்றிய தகவல்களைவழங்கும் பிராந்திய சேவை மத்தியநிலையங்களின் (RTSP) ஒத்துழைப்புடன் பொதுமக்களுக்கும் அதேபோன்று பொறுப்புவாய்ந்த நிறுவனங்களுக்கும் வெளியீடுகளும் ஆலோசனைகளும் எதிர்வுகூறும் எச்சரிக்கைகளும் வழங்கப்பட்டன. வதந்திகள் மற்றும் பிழையான தகவல்கள் காரணமாக பீதியுற்ற பொதுமக்களுக்கு நிலைமையை விளக்கி பதிலளிக்கப்பட்டது.

## 20. ஆராய்ச்சி முயற்சிகள்

ஆராய்ச்சிப் பிரிவினாலும் காலநிலை மாற்ற ஆய்வுகள் நிலையத்தினாலும் 2012 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட ஆராய்ச்சிகள் கீழ் தரப்பட்டுள்ளது:-

1. வானிலை ஆராய்ச்சி மற்றும் எதிர்வுகூறல் கணனி மாதிரித் தரவுகளை (WRF Datea) AWS தரவுகளுடன் பகுப்பாய்வுசெய்தல்.
2. வானிலை ஆராய்ச்சி மற்றும் எதிர்வுகூறல் கணனி மாதிரித் தரவுகளை (மாதாந்த, பருவகால, அமுக்க கிரமப்படி) நேர்வரிசை பகுப்பாய்வு மூலம் மழைவீழ்ச்சி எதிர்வுகூறுகை.
3. மழைவீழ்ச்சி மற்றும் வெப்பநிலைத் தரவுப் பகுப்பாய்வு (1990-2010)
4. SYNOP தரவு மையம் மற்றும் வரைபடமாக்கி காட்சிப்படுத்தும் முறைமையை தயார்செய்தல்.
5. AWS தரவு வரைபடமாக்கி காட்சிப்படுத்தும் முறைமை ஆவணத்தைத் தயாரித்தல்.
6. தென்மேல் பருவப் பெயர்ச்சிக்காற்று மழை ஆரம்பத்தின்போது மண்ணின் தாக்கம் பற்றிய ஆய்வு.
7. காலநிலை ஆராய்ச்சிகள் மற்றும் எதிர்வுகூறல் கணனி மாதிரியை (WRF) பயன்படுத்தி மூன்று நாட்களுக்கும் ஏழு நாட்களுக்கும் எதிர்வுகூறல்.

8. அனர்த்தங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவம், வானிலை மாற்றங்கள், இயற்கைப் பேரிடர்கள் பற்றிய தகவல்களைச் சித்தரிப்பதற்கான ஆவணங்களைத் தயாரித்தல்.
9. தசாப்த அடிப்படையிலான இலங்கையின் மழைவீழ்ச்சிகள் (1951-2010), நடு வெப்பநிலைகள் (1900-2010) பற்றிய பகுப்பாய்வு.
10. இலங்கையை அண்டிய ஆள்புலம்கடந்த கதிர்ப்பு மாதிரிக்கான SPI இன் தாக்கத்தைக் கணிப்பிடுதல்.
11. பருவப்பெயர்ச்சிகள் நின்றுபோதல் மற்றும் SPI தாக்கத்தை (1951-2010) அடையாளம் காணலும்.

## 21. திணைக்களத்தைப் பார்வையிடுவதற்கு வருகைதரல்

கடந்த ஆண்டைப் போலவே இவ்வாண்டிலும் பாடசாலை மாணவர்களின் வருகைகள் கணிசமான அளவில் உயர்ந்துள்ளது. இவ்வாண்டில் 188 பாடசாலை மாணவக் குழுக்களின் 19,112 பாடசாலை மாணவர்களும், 641 பாதுகாப்புப் பிரிவு அங்கத்தவர்களில் 15 குழுக்களும் 11 உயர்கல்வி நிறுவகங்களின் 597 பேரும் திணைக்களத்தைப் (பிரதான அலுவலகம்) பார்வையிடுவதற்கு வருகை தந்துள்ளனர்.

## 22. மின்னல் பாதுகாப்பு நடவடிக்கைகள்

மின்னல் ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்புப்பெறும் முறைகள் சம்பந்தமாக பொதுமக்களை அறிவுறுத்தும் பணி கிரமமாக மேற்கொள்ளப்பட்டதுடன், மின்னல் ஆபத்து அதிகமாக இடம்பெறும் கேகாலை, களுத்துறை ஆகிய மாவட்ட பொதுமக்களின் பயன்பாட்டுக்கு மின்னல் ஆபத்திலிருந்து பாதுகாப்புப்பெறும் முறைகள் பற்றி திணைக்களத்தினால் 08 செயலமர்வுகள் குறித்த காலப்பகுதியில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன. எதிர்காலத்தில் இச்செயலமர்வுகளை ஏனைய மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு மேலதிகமாக, அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட பொதுமக்களை அறிவுறுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களுக்கான வளப் பங்களிப்பும் அளிக்கப்பட்டது.

## 23. புலமைப்பரிசில்களும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் கருத்தரங்குகளும்

### (அ) வெளிநாட்டுப் பயிற்சி/கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிச் செயலமர்வுகள்

2011 ஆண்டில் வெளிநாட்டு பயிற்சிப்பட்டறைகள் மற்றும் பயிற்சிகளில் பங்குபற்றிய உத்தியோகத்தர்கள்

| இல | பெயர் | விபரம் | உதவி வழங்கிய நிறுவனம் |
|---|---|---|---|
| 1 | திரு. எம்.எம்.பி.மெண்டிஸ் | வங்காள விரிகுடா பிரதேசத்திற்கான புயல் அலையெழுச்சி வருவது கூறலை முன்னேற்றும் கருத்திட்டத்தின் தொழில்நுட்ப நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கான செயலமர்வு - இந்தியா: 23.01.2012 – 27.01.2012 | உலக வளிமண்டலவியல் அமைப்பு (WMO) |

| | | | |
|---|---|---|---|
| 2 | திருமதி ஏ.ஆர். வர்ணசூரிய | இந்து சமுத்திரத்தின் புயல்காற்று மற்றும் காலநிலை மாற்றத்திற்கான 2 ஆவது சர்வதேச உச்சிமாநாடு - இந்தியா: 14.02.2012 - 17.02.2012 | உலக வளிமண்டலவியல் அமைப்பு (WMO) |
| 3 | திரு. டீ.எஸ். ஜயசிங்க ஆரச்சி | பருவ கால புயற்காற்று எதிர்வுகூறல் - இந்தியா: 20.02.2012 – 02.03.2012 | உலக வளிமண்டலவியல் அமைப்பு (WMO) |
| 4 | திரு. லலித் சந்திரபால | அனர்த்தங்களுக்கு தாக்குப்பிடித்தல் சம்பந்தமான வங்காளதேசத்தின் அனுபவங்கள் பற்றிய கற்பித்தல்கள் - வங்காளதேசம்: 24.02.2012 – 29.02.2012 | இலங்கை அரசாங்கம் |
| 5 | திரு. எம்.டி.தயானந்த | யப்பானில் ஏற்பட்ட மாபெரும் நில அதிர்வை அடுத்து அனர்த்தங்களைத் தடுத்துக்கொள்ளல் - அழிவு முகாமைத்துவத்திற்கான வளிமண்டலவியல் சேவைகள் பற்றிய கருத்தரங்கு – யப்பான்: 04.03.2012 – 13.03.2012 | ஜைக்கா (JICA) |
| 6 | திரு. டீ.ஜே.ஏ.வீரவர்த்தன | காலநிலைத் தரவுகள் மூலம் உறுதிப்பாடான ஆசிய கமத்தொழில் மற்றும் ஆராய்ச்சிகளை முன்னேற்றுவதற்கான முன்னுரிமைகள் பற்றிய செயலமர்வு – தாய்லாந்து: 11.04.2012 – 12.04.2012 | உலக வளிமண்டலவியல் அமைப்பு (WMO) |
| 7 | திரு. எஸ்.ஆர்.ஜயசேக்கர | கொரிய தொடர்பாடல்கள், சமுத்திர, வளிமண்டலவியல் தரவுகளைப் பெற்றக்கொள்ளும் செய்மதிமூலம் வழங்கப்படும் தரவுகளைப் பகுப்பாய்வுசெய்வதற்கான பயிற்சி – கொரியா: 10.06.2012 – 23.06.2012 | கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை - கொய்க்கா (KOICA) |
| 8 | திருமதி டீ.ஜீ.பர்னாந்து | - மேற்படி - | - மேற்படி – |
| 9 | திரு. எம்.எம்.பி.மெண்டிஸ் | - மேற்படி - | - மேற்படி – |
| 10 | திரு. ஜே.ஏ.திலகரத்ன | - மேற்படி - | - மேற்படி – |
| 11 | திரு. கே.எச்.எம்.எஸ். பிரேமலால் | SAARC வானிலை ஆராய்ச்சி நிறுவனம் விஞ்ஞானி பதவி – வங்காளதேசம்: 10.08.2012 – 09.08.2012 | SMRC – SAARC வானிலை ஆராய்ச்சி நிறுவனம் |
| 12 | திரு. எம்.ஏ.சி. தயன்த | சமுதாய அடிப்படையிலான அனர்த்த முகாமைத்துவம், முன் தயார்படுத்தலும் தடுப்பு உபாயமுறைகளும் பற்றிய பயிற்சிக் கற்கைநெறி - இந்தியா: 22.08.2012 – 18.10.2012 | இந்திய அரசாங்கம் |
| 13 | திரு. ஏ.ஜீ.எம்.எம்.விமலசூரிய | கொரிய தொடர்பாடல், சமுத்திர, காலநிலைத் தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் செய்மதி ஊடாக வழங்கப்படும் தரவுகளைப் பகுப்பாய்வுசெய்வதற்கான பயிற்சி – கொரியா: 02.09.2012 – 22.09.2012 | கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை - கொய்க்கா (KOICA) |
| 14 | திருமதி ஏ.ஆர்.வர்ணசூரிய | வளிமண்டலவியல் சேவைகளைப் பலப்படுத்துவதற்கான பயிற்சி – யப்பான்: 10.09.2012 – 08.12.2012 | யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை - ஜைக்கா (JICA) |
| 15 | திருமதி டீ.ஜீ.பர்னாந்து | வளிமண்டலவியலாளர்களுக்கான சர்வதேச பயிற்சிக் கற்கைநெறி – சீனா: 17.09.2012 – 26.09.2012 | சீன வளிமண்டலவியல் முகவராண்மை (CMA) |
| 16 | செல்வி ஐ.எம்.எஸ்.பி.ஜயவர்த்தன | தென்மேற்கு இந்துசமுத்திர பிராந்தியத்திற்கான காலனிலை எதிர்வுகூறுகைப் பேச்சுவார்த்தைச் சுற்று (SWIOCOF) – லா ரியூனியன்: 24.09.2012 – 03.10.2012 | உலக வளிமண்டலவியல் அமைப்பு (WMO) |
| 17 | திரு. ஏ.எல்.கே.விஜேமான்னகே | ஆசிய அனர்த்த முன் தயார்படுத்தல் மத்தியநிலையத்தினால் நடாத்தப்பட்ட ஆராய்ச்சிபூர்வமான எதிர்வுகூறுகைக்கான (றுசுகு) பயிற்சிச் செயலமர்வு – வியட்நாம்: 24.09.2012 – 28.09.2012 | ஆசிய அனர்த்த முன் தயார்படுத்தல் மத்தியநிலையம் (ADPC) |
| 18 | திரு. ரி.எம்.என். பீரிஸ் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| 19 | திருமதி எச்.ஏ.எஸ்.யூ. ஹப்புஆரச்சி | - மேற்படி - | - மேற்படி - |
| 20 | திரு.ஏ.எல்.கே. விஜேமான்னகே | யப்பானிய வானிலை நிறுவனத்தின்மூலம் நடாத்தப்பட்ட வானிலைத் தகவல் முறைமையை (றுஜஐளு) அங்குரார்ப்பணம்செய்வதற்கான செயலமர்வு – யப்பான்: 22.10.2012 – 24.10.2012 | யப்பானிய வளிமண்டலவியல் முகவராண்மை (JMA) |
| 21 | திரு. ஏ.கே. கருணாநாயக்க | விமானப் பயணங்களுடன் தொடர்பான வளிமண்டலவியலாளர்களதும் அவதானிப்பாளர்களதும் திறன் மதிப்பீடு - இஸ்ரேல்: 29.10.2012 – 02.11.2012 | உலக வளிமண்டலவியல் அமைப்பு (WMO) |
| 22 | திரு. கே.ஜீ.எம்.எல்.டி. சுச்சரித்தரத்ன | சமுத்திர அவதானிப்பும் உபகரணங்களை அடையாளமிடலும் (பாகைகளைக் குறித்தல்) - இந்தியா: 19.11.2012 – 21.11.2012 | உலக வளிமண்டலவியல் அமைப்பு (WMO) |
| 23 | திரு. ஏ.கே. கருணாநாயக்க | காலனிலைத் தகவல்கள் பகுப்பாய்வு பற்றிய வுஊஊ (ரோக்கியோ காலநிலை மத்தியநிலையம்) பயிற்சிச் செயலமர்வு – ஹொங்கொங்: 26.11.2012 – 30.11.2012 | யப்பானிய வளிமண்டலவியல் முகவராண்மை (JMA) |
| 24 | திரு. ரி.எம்.என்.பீரிஸ் | புள்ளிவிவரவியல்சார்ந்த எதிர்வுகூறல் மாதிரியைப் பயன்படுத்தலும் அவற்றின் பொருள்கோடல் பற்றிய சர்வதேச பயிற்சிச் செயலமர்வும் - ஹொங்கொங்: 03.12.2012 – 07.12.2012 | உலக வளிமண்டலவியல் அமைப்பு (WMO) |
| 25 | திரு. லலித் சந்திரபால | ஆபிரிக்கா மற்றும் தெற்காசிய விவசாயிகளுக்கான காலநிலைச் சேவைகள் - செனகல்: 09.12.2012 – 12.12.2012 | உலக வளிமண்டலவியல் அமைப்பு (WMO)/ USAID |
| 26 | திரு.எஸ்.ஆர். ஜயசேக்கர | புயல் எதிர்வுகூறுகை நிபுணர் பயிற்சி - இந்தியா: 10.12.2012 – 21.12.2012 | உலக வளிமண்டலவியல் அமைப்பு (WMO) |
| 27 | திரு. ஏ.ஜீ.எம்.எம். விமலசூரிய | பருவகால புயற்காற்று பகுப்பாய்வுசெய்வதற்கான பயிற்சி - இந்தியா: 10.12.2012 – 21.12.2012 | |

வளிமண்டலவியல் விஞ்ஞானி திரு. கே.டி.சுஜீவ உலக வளிமண்டலவியல் அமைப்பின் அனுசரணையின்கீழ் பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழகத்தில் வளிமண்டலவியல் பற்றிய பட்டப்பின்படிப்பு கற்கைநெறியை முடித்துக்கொண்டு 31.05.2012 ஆந் திகதி சேவைக்குத் திரும்பினார்.

வளிமண்டலவியல் விஞ்ஞானி திருமதி பி.பம். ஜயகொடி 01.06.2011 முதல் 31.05.2012 ஆந் திகதி வரை உலக வளிமண்டலவியல் அமைப்பின் அனுசரணையின்கீழ் பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழகத்தில் வளிமண்டலவியல் பற்றிய பட்டப்பின்படிப்பு கற்கைநெறியை பயின்று வருகிறார்.

வளிமண்டலவியல் விஞ்ஞானிகளான திரு.பி.வை. யசரத்ன, திரு. பி.எச்.சி. த சில்வா ஆகியோர் இந்திய அரசாங்கத்தின் அனுசரணையின்கீழ் இந்தியாவின் அஹமதாபாத் விண்வெளி நிலையத்தில் (Space Application Centre) செய்மதி வளிமண்டலவியல் பற்றிய டிப்ளோமா கற்கைநெறியைத் தொடர்வதற்காக 01.08.2012 ஆந் திகதி புறப்பட்டதுடன், கற்கைநெறியைப் பூர்த்திசெய்துவிட்டு 01.05.2013 ஆந் திகதி நாடு திரும்பவுள்ளார். வளிமண்டலவியல் விஞ்ஞானி திருமதி ஜி.கே. ஹென்தவிதாரண உலக வளிமண்டலவியல் அமைப்பின் அனுசரணையின்கீழ் பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழகத்தில் வளிமண்டலவியல் பற்றிய பட்டப்படிப்பு கற்கைநெறியை (IESM) 08.11.2012 ஆந் திகதியிலிருந்து கற்றுவருவதுடன் 09.11.2014 ஆந் திகதி நாடு திரும்பவுள்ளார்.

**(ஆ) சர்வதேச/பிராந்திய கூட்டங்களில் பங்கேற்பு**

2012 ஆண்டில் சர்வதேச/பிராந்திய கூட்டங்களில் பங்கேற்பு

| இல | பெயர் | விபரம் | உதவி வழங்கப்பட்ட நிறுவனம் |
|---|---|---|---|
| 1 | திரு. டீ.ஏ.ஜயசிங்க ஆரச்சி | ஆசிய பசுபிக் வலையமைப்பின் (APN) தெற்காசிய உப பிராந்திய ஒத்துழைப்பு பற்றிய 3 ஆவது கூட்டமும் கருத்திட்ட உருவாக்கம் பற்றிய பயிற்சிச் செயலமர்வும் - பூட்டான்: 16.01.2012 – 19.01.2012 | ஆசிய பசுபிக் வலையமைப்பு (APN) |
| 2 | திருமதி ஏ.ஆர். வர்ணசூரிய | இந்து சமுத்திர பருவகால சுறாவளி மற்றும் காலநிலை மாற்றத்திற்கான 2 ஆவது சர்வதேச கருத்தரங்கு - இந்தியா: 14.02.2012 – 17.02.2012 | உலக வளிமண்டலவியல் அமைப்பு (WMO) |
| 3 | திரு. எஸ்.எச். காரியவசம் | சூறாவளிகளுக்கான உலக வளிமண்டலவியல் அமைப்பின் ESCAP 39 ஆவது உப குழு அமர்வு – மியன்மார்: 05.03.2012 – 09.03.2012 | இலங்கை அரசாங்கம் |
| 4 | திரு. டீ.ஜே.ஏ. வீரவர்த்தன | 2012 உலக வளிமண்டலவியல் தினத்தைக் குறிக்கும் செயலமர்வு – கொரியா: 20.03.2012 - 24.03.2012 | கொரிய வளிமண்டலவியல் முகவராண்மை (KMA) |
| 5 | செல்வி ஐ,எம்.எஸ்.பி. ஜயவர்த்தன | தென்மேல் பருவப்பெயர்ச்சி காலத்திறகான மழைவீழ்ச்சி எதிர்வுகூறுகை பற்றிய செயலமர்வும் தெற்காசிய பருவங்களுக்கான காலநிலை எதிர்வுகூறுகை பற்றிய மூன்றாவது கூட்டத்தொடரும் - இந்தியா: 16.04.2012 – 20.04.2012 | உலக வளிமண்டலவியல் அமைப்பு (WMO)/ இந்திய வளிமண்டலவியல் முகவராண்மை (IMA) |
| 6 | திரு. எஸ்.எச். காரியவசம் | அனர்த்த முகாமைத்துவம் பற்றிய தலைமைத்துவ செயற்பொறுப்பு: அமெரிக்கா: 21.04.2012 – 28.04.2012 | அமெரிக்க அரசாங்கம் |
| 7 | திரு. எஸ்.எச். காரியவசம் | RIMES 5 ஆவது கூட்டத்தொடரும் அமைச்சர் மட்ட முதலாவது கூட்டமும் - இந்தியா: 18.06.2012 – 24.06.2012 | RIMES / இந்திய அரசாங்கம் |
| 8 | திரு. எஸ்.எச். காரியவசம் | சுழல் காற்றுக்கள் பற்றிய ஆராய்ச்சிகளுக்கான சார்க் விஞ்ஞானக் கருத்தரங்கும் சார்க் IPC கூட்டமும் - பாக்கிஸ்தான்: 05.09.2012 – 06.09.2012 | SMRC – SAARC காலநிலை ஆராய்ச்சி நிறுவனம் |
| 9 | திரு. டீ.ஜே.ஏ.வீரவர்த்தன | சார்க் காலநிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் 18 ஆவது நிருவாக சபைக் கூட்டம் - வங்காளதேசம்: 12.09.2012 – 13.09.2012 | SMRC – SAARC காலநிலை ஆராய்ச்சி நிறுவனம் |
| 10 | திரு. எஸ்.எச். காரியவசம் | கருத்திட்ட மதியுரைக் கூட்டம், வட்டமேசை மாநாடும் கூட்ட தொடரும் - தாய்லாந்து: 04.10.2012 – 05.10.2012 | ADPC - ஆசிய அனர்த்த முன் தயார்படுத்தல் மத்தியநிலையம் |
| 11 | திரு. எஸ்.எச். காரியவசம் | பிராந்திய துரித வெள்ளப்பெருக்கு வழிகாட்டல் தொகுதியை நிறுவுவதற்கான திட்டமிடல் கூட்டம் - நேபாளம்: 26.11.2012 – 28.11.2012 | ICIMOD - இணைந்த மலைகளின் அபிவிருத்திக்கான சர்வதேச நிலையம் |

**(இ) உள்நாட்டுப் பயிற்சி**

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் (SLIDA), இலங்கை மன்றம் மற்றும் வேறு நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட இயல்திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்), வளிமண்டலவியல் விஞ்ஞானிகள் நால்வர், கணக்காளர், முகாமைத்துவ உதவியாளர்கள் 28 பேர், அலுவலகப் பணியாளர் ஒருவர், சாரதிகள் 06 பேர் என்ற அடிப்படையில் பங்கேற்கச் செய்யப்பட்டனர். அரச கரும மொழிப் பயிற்சி

நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் 2 உத்தியோகத்தர்கள் தமிழ் மொழிப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டனர். கடந்த வருடம் இணைத்துக்கொள்ளப்பட்ட வளிமண்டலவியல் அவதானிப்பாளர் (பயிற்சி) உத்தியோகத்தர்களின் பயிற்சிகள் ஆகஸ்ட் மாதமளவில் பூர்த்தியடைந்தது. இலங்கை தொழில்நுட்ப சேவையின் 37 உத்தியோகத்தர்களுக்கு இரண்டு வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று (கண்ணொருவை கமத்தொழில் பயிற்சி நிலையத்திலும்) 55 உத்தியோகத்தர்களுக்கு இரண்டு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று (கொழும்பு தலைமையகத்திலும்) நடாத்தப்பட்டது. புதிய வளிமண்டலவியல் விஞ்ஞானிகள் மூவருக்கு வளிமண்டலவியல் பற்றிய ஆரம்பப் பயிற்சி திணைக்களத்தில் வழங்கப்பட்டது.

**(ஈ) நடாத்தப்பட்ட கருத்தரங்குகள், செயலமர்வுகள், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்**

விண்வெளி வளிமண்டலவியல் சேவைகருக்கான தர முகாமைத்துவ முறைமை குறித்த நான்கு நாள் சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் உலக வளிமண்டலவியல் அமைப்பின் ஒத்துழைப்புடன் கொழும்பில் நடாத்தப்பட்டது.

பல்வேறு நிறுவனங்கள்மூலம் பல்வேறு பிரதேசங்களில் நடாத்தப்பட்ட காலநிலை, வானிலை மாற்றங்கள் அல்லது இயற்கை அனர்த்தங்கள் தொடர்பான 20 க்கு மேற்பட்ட செயலமர்வுகள், கருத்தரங்குகள், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான வளப் பங்களிப்பு வழங்கப்பட்டது.

சுஐஆநுளு நிதி உதவியின் கீழ் 2 பருவகால பத்திர செயலமர்வுகள் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவங்களுக்காக நடாத்தப்பட்டது. தென்மேற்கு பருமம் மற்றும் வடகிழக்கு பருவம் ஆரம்பிக்க முன்னர் அக்காலகட்டத்தில் எதிர்பார்க்கக்கூடிய காலநிலை நிலைமைகள், மாற்றங்கள், அனர்த்தங்கள் குறித்து அறிவுறுத்துவதற்காக ஊடகங்கள் ஊடகவியலாளர் மாநாடுகள் நடாத்தப்பட்டன. ஒற்றோபர் மாத இறுதி வாரத்தில் திருகோணமலைக்கு கிழக்கில் கடலில் எழுந்த 'நீலம்' சூறாவளி குறித்து அறிவுறுத்துவதற்கும் ஊடகவியலாளர் மாநாடு நடாத்தப்பட்டது.

பாடசாலைகள் மற்றும் ஏனைய 19 நிறுவனங்களினால் ஏற்பாடுசெய்யப்பட்ட கண்காட்சிகளுக்கான காட்சிப்பொருள்களையும் வளவாளர்களையும் அவசியமான பயிற்சியையும் வழங்கி வளிமண்டலவியல் தொடர்பான அறிவை விருத்திசெய்ய உதவி அளிக்கப்பட்டது.

## 24. ஏனைய செயற்பாடுகள்

அநுராதபுரம் மாவட்டத்தில் ஓயாமடுவ பிரதேசத்தில் நடாத்தப்பட்ட 'தேசத்திற்கு மகுடம்' (தயட்ட கிருள) கண்காட்சிக்காக திணைக்களத்தின் பங்கேற்பு வழங்கப்பட்டது. இக்கண்காட்சிக்கு இணையாக 10 மழைமானிகள் நிறுவப்பட்டன.

மார்ச்சு 23 ந் திகதி கொண்டாடப்படும் உலக வளிமண்டலவியல் தினத்தைக் குறிக்கும் 2012 ஆம் ஆண்டின் தொனிப்பொருளாக "எமது எதிர்காலத்தைப் பலப்படுத்துவதற்கு காலநிலை, வானிலை, நீர்" என்பது தெரிவுசெய்யப்பட்டது. பாடசாலைப் பிள்ளைகள்,

வளிமண்டலவியல் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் நிறுவனங்களதும் ஊடக நிறுவனங்களதும் பிரதிநிதிகளும் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களதும் பங்கேற்புடன் அத்தினம் கொண்டாடப்பட்டது.

அனர்த்தங்களுக்கு உள்ளாகக்கூடிய தாழ்நிலங்களுடன்கூடிய கரையோரம்சார்ந்த பகுதிகளுக்குரிய RIMES நிறுவனத்தின்மூலம் மேற்கொள்ளப்படும் முன்னோடிக் கருத்திட்டம் தொடர்பாக அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு திணைக்களத்தின் பங்களிப்பு வழங்கப்பட்டது.

## 25. வருமானம்

பிரதானமாக காலநிலைத் தரவுகளையும் வளிமண்டலவியல் தகவல்களையும் வழங்குவதன் மூலம் இவ்வாண்டில் கிடைக்கப்பெற்ற வருமானம் ரூபா. 6,147,077.00 ஆகும்.

## 26. செலவினம்

பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழான செலவினங்கள் பின்வரும் இணைப்புகளில் தரப்பட்டுள்ளன.

2012 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டின்படி மீண்டுவரும் செலவினம்
கருத்திட்டம் 1 - வளிமண்டவியல் சேவைகள் — இணைப்பு 1

2012 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டின்படி மூலதனச் செலவினம்
கருத்திட்டம் 1 - வளிமண்டவியல் சேவைகள் — இணைப்பு 2
கருத்திட்டம் 1 - கொடைவழங்குநர் உதவியுடன் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள்

2012 ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்பட்ட மற்றும்-
உண்மையான வருமானக் கணக்கு — இணைப்பு 3
2012 ஆம் ஆண் முற்பணக்கணக்கின் பொழிப்பு — இணைப்பு 4

## 27. கொள்வனவுசெய்தவை

- கணனிகளும் சம்பந்தப்பட்ட உபகரணங்களும் - ரூபா. 1,667,625.00
- வளிமண்டலவியல் உபகரணங்கள் - ரூபா. 7,250,342.86
- தன்னியக்க வானிலை முறைமைகளுக்கான உதிரிப்பாகங்கள் கொள்வனவு - ரூபா. 2,876,430.35
- டொப்லர் டேரார் முறைமை தொடர்பான செலவுகள் - ரூபா. 10,249,394.83

## 28. வெளியீடுகள்

இவ்வாண்டில் வெளியிடப்பட்ட வெளியீடுகள் பற்றி விபரம் தரப்பட்டுள்ளது:

- திணைக்களத்தின் வருடாந்த நிருவாக அறிக்கை
- மாதாந்த வானிலை அறிக்கைகளின் பொழிப்பு

- சூரிய உதய நேரம், சூரிய அஸ்தமன நேரம், சந்திர உதய நேரம், சந்திர அஸ்தமன நேரம், விளக்கேற்றும் நேரங்கள்.
- வாராந்த வானியல் மீளாய்வு - இணையத்தின் ஊடாக
- கொழும்பு, காலி, திருகோணமலை ஆகிய பிரதேசங்களின் ஏற்ற அலை, இறக்க அலைகளின் மாதாந்த அட்டவணைகள்

## 29. நன்றி நவிலல்

பல்வேறு கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள், கூட்டங்களில் எமது நிறுவனத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய சகல அரசாங்க நிறுவனங்களுக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். பொது மக்களுக்கு வானிலைத் தகவல்களை உடனடியாக வழங்கியமைக்காக ஊடகத்துறைக்கும் எனது நன்றி உரித்தாகும். இறுதியாக, இத் திணைக்களத்தின் சகல பணியாளர்களும் வழங்கிய தாமதமின்றிய, நேர்மையான சேவை குறித்து திணைக்களத்தின் சகல ஊழியர்களுக்கும் நான் எனது நன்றியை தனிப்பட்ட முறையில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

**எஸ்.எச். காரியவசம்,**
பணிப்பாளர் நாயகம்,
வளிமண்டலவியல் திணைக்களம்,
பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 07.

*<u>இணைப்பு 1</u>*

**2012 நிதி ஒதுக்கீடுகள் - மீண்டுவரும் செலவினம் (ரூ)**

**வளிமண்டலவியல் திணைக்களம்**

தலைப்பு - 304 நிகழ்ச்சித்திட்டம் - 02 கருத்திட்டம் - 01

| வகை | கருத்திட்டம் - 01 | |
|---|---|---|
| | நிதிஒதுக்கீடு - ரூபா | செலவினம் -ரூபா |
| **ஆளுக்குரிய வேதனாதிகள்** | **118,900.00** | **118,388,570.00** |
| **ஏனைய மீண்டுவரும் செலவினம்** | **63,717,000.00** | **58,193,147.00** |
| பிரயாணச் செலவுகள் | 3,050,000.00 | 2,382,759.00 |
| வழங்கல்கள் | 16,375,000.00 | 13,119,602.00 |
| பராமரிப்பு செலவினம் | 10,025,000.00 | 8,846,198.00 |
| சேவைகள் | 29,864,000.00 | 26,233,937.00 |
| மாற்றல்கள் | 8,036,000.00 | 7,610,651.00 |
| **மொத்தச் செலவினம்** | **186,250,000.00** | **176,581,717.00** |

## 2012 நிதி ஒதுக்கீடு - மூலதனச் செலவினம் (ரூ)

**வளிமண்டலவியல் திணைக்களம்**

தலைப்பு - 304 நிகழ்ச்சித்திட்டம் - 02 கருத்திட்டம் - 01

| செலவு விடய குறியீடு | செலவு விடய விபரம் | 2012ஆம் ஆண்டிற்கான தேறிய ஏற்பாடு ரூபா. | 2012-ம் ஆண்டிற்கான செலவினம் ரூபா. |
|---|---|---|---|
| | **மொத்தம் (கருத்திட்டம் 01)** | **348,119,395.00** | **157,716,051.00** |
| **கருத்திட்டம்** | **வளிமண்டலவியல் சேவைகள்** | | |
| **01** | **மொத்தம்** | **348,119,395.00** | **157,716,051.00** |
| | **புனரமைப்பும் மேம்படுத்தல்களும்** | **5,500.000.00** | **1,861,162.00** |
| 2001 | கட்டடங்களும் கட்டமைப்புகளும் | **5,500.000.00** | **1,861,162.00** |
| | **நிலையான சொத்துக்கள் கொள்ளல்** | **340,999,395.00** | **154,601,183.00** |
| 2102 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 3,100,000.00 | **2,750,441.00** |
| 2103 | இயந்திரங்கள் | 325,549,395.00 | **144,073,432.00** |
| 2104 | கட்டடங்களும் கட்டமைப்புகளும் | 12,000,000.00 | **7,675,280.00** |
| 2105 | காணியும் காணி மேம்படுத்தல்களும் | 350,000.00 | 102,030.00 |
| | **திறன் விருத்தி** | **400,000.00** | **367,842.00** |
| 2401 | பயிற்சியும் திறன் விருத்தியும் | 400,000.00 | 367,842.00 |
| | **ஏனைய மூலதனச் செலவினம்** | | |
| 2502 | **முதலீடுகள்** | **1,220,000.00** | **885,864.00** |
| | **மொத்தம்** | **9,400,000** | **885,864.00** |
| | **வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்கள்** | | |
| | **மொத்தம்** | 296,300,000.00 | 123,599,550.00 |
| | **நிலையான சொத்துக்கள் கொள்ளல்** | 296,300,000.00 | 123,599,550.00 |
| | **இயந்திரங்கள்** | | |
| 2103 | 13. வெளிநாட்டு மானியக் கொடை | 221,000,000.00 | 117,560,638.00 |
| | 17. வெளிநாட்டு உதவி – உள்ளூர் நிதியம் | 75,300,000.00 | 6,038,912.00 |

*இணைப்பு 3*

**2012 ஆம் ஆண்டிற்கான உத்தேச மற்றும் உள்ளபடியான வருமானக் கணக்கு**

**வளிமண்டலவியல் திணைக்களம்**

தலைப்பு - 304 நிகழ்ச்சித்திட்டம் - 02 கருத்திட்டம் - 01

| வருமானக் குறியீடு | விபரம் | 2012 வருமானம் | |
|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட (ரு) | உள்ளபடியான (ரு) |
| 20.02.01.01 | அரசாங்க சொத்துக்களிலிருந்தான வருமானம் - வாடகை அரசாங்க கட்டிடங்களின் வாடகை | 500,000 | 501,133 |
| 20.02.01.99 | அரசாங்க சொத்துக்களிலிருந்தான வருமானம் - வாடகை ஏனைய வாடகைகள் | 12,600 | 12,600 |
| 20.02.02.29 | வட்டி – ஏனைய | 1,600,000 | 1,409,757 |
| 20.03.02.99 | விற்பனவு நடபடிகளும் கட்டணங்களும்- நிருவாகக் கட்டணங்கள் - நானாவித | 6,300,000 | 5,933,490.00 |
| 20.03.99.00 | விற்பனவு நடபடிகளும் கட்டணங்களும்- ஏனைய பெறுவனவுகள் | 4,000,000 | 213,587 |
| **மொத்தம்** | | **8,812,600** | **8,070,567** |

*இணைப்பு 4*

**2012 ஆம் ஆண்டிற்கான முற்பணக் கணக்கின் பொழிப்பு**

**வளிமண்டலவியல் திணைக்களம்**

தலைப்பு - 304 நிகழ்ச்சித்திட்டம் - 02 கருத்திட்டம் - 01

| விடயம் | 2012 மதிப்பிடப்பட்ட (ரு) | 2012 உள்ளபடியான (ரு) |
|---|---|---|
| **அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு:** | | |
| செலவின் ஆகக்கூடிய எல்லை | 15,000,000.00 | 3,572,989.00 |
| பெறுவனவுகளின் ஆகக்குறைந்த எல்லை | 5,500,000.00 | 8,301,283.00 |
| பற்று நிலுவையின் ஆகக்கூடிய எல்லை | 60,000,000.00 | 31,441,436.00 |